THE NEW INDIAN EXPRESS

19 AUG 2021

PAGE 3




## BE THE 'EYES & EARS'

Public Police- Puducherry chapter being inaugurated in the presence of Justice KG Balakrishnan, Pondicherry University Vice chancellor Gurmeet Singh and others on Wednesday in Puducherry | G PATTABI RAMAN

EXPRESS READ

"THE TIMES OF INDIA"

PAGE NO: 05

DATE: 19.08.21

# Pondy univ to fill MBA seats on CAT scores

TIMES NEWS NETWORK

**Puducherry:** Pondicherry University will fill up MBA seats falling vacant after admitting students based on their CAT score by holding a common entrance examination for the academic year 2021-22.

The department of management studies offers MBA (general) and the department of international business offers MBA (international business). The university admitted students to these courses based on their CAT scores until the last academic year.

This year the university will admit students to these courses based on both CAT score and university entrance score of the students. The university after admitting students based on their CAT score will fill the remaining vacancies based on the university entrance score of the students. Admission to the two courses closes on August 27. For more details visit https://www.pondiuni.edu.in/admissions-2021-22/.

"DAILYTHANTHI"

PAGE NO: 08 DATE: 19.08.21

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# எம்.பி.ஏ. படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம்

புதுச்சேரி, ஆக.19-

புதுவை பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

புதுவை பல்கலைக்கழகத்தில் 2021-22 கல்வி ஆண்டில் முதுநிலை வணிக மேலாண்மை படிப்பு (எம்.பி.ஏ.) மற்றும் முதுகலை பன்னாட்டு வணிக மேலாண்மை ஆகிய படிப்புகளுக்கு இந்திய மேலாண்மை நிறுவனம் சார்பில் நடத்தப்படும் பொதுநுழைவுத்தேர்வு மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன. தற்போது மேற்கண்ட படிப்புகளுக்கு புதுச்சேரி பல்கலைக்கழக பொது நுழைவுத்தேர்வு மூலமும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த கல்வியாண்டில் மாணவர்கள் சேர்க்கையானது முதலில் இந்திய மேலாண்மை நிறுவனம் சார்பில் நடத்தப்படும் பொது நுழைவுத்தேர்வின் அடிப்படையில் நடத்தப்பட்டு மீதமுள்ள காலியிடங்கள் பல்கலைக்கழக பொது நுழைவுத் தேர்வின் அடிப்படையில் நிரப்பப்படும். இதற்கு மாணவர்கள் வருகிற 27-ந்தேதிக்குள் இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு பல்கலைக்கழகத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தை காணலாம்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

"DINAMALAR"

PAGE NO: 04 DATE: 19.08.21

# பல்கலைக்கழக எம்.பி.ஏ., படிப்புகளுக்கு 27ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்

**புதுச்சேரி, ஆக. 19–**

எம்.பி.ஏ., முதுகலை வணிக மேலாண்மை, பன்னாட்டு வணிக மேலாண்மை படிப்புகளில், பல்கலைக்கழக பொது நுழைவுத்தேர்வு மூலம் சேர, 27ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

நடப்பு 2021–22 கல்வியாண்டிற்கு, மேலாண்மை துறையின் முதுகலை வணிக மேலாண்மை, பன்னாட்டு வணிக துறையின் முதுகலை பன்னாட்டு வணிக மேலாண்மை படிப்புகளுக்கு, ஐ.ஐ.எம்., நுழைவுத் தேர்வு மூலம் சேர்க்கை நடக்கிறது.

இதற்கான விண்ணப்பங்கள் முன்பே பெறப்பட்டது.

தற்போது, இப்படிப்புகளுக்கு, புதுச்சேரி பல்கலைக்கழக பொது நுழைவுத்தேர்வு மூலமும் சேர விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. வரும் 27ம் தேதிக்குள் இணைய வழியில் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு பல்கலைக்கழக www.pondiuni.edu.in இணையத் தளத்தை காணவும்.

முதலில் ஐ.ஐ.எம்., நுழைவுத் தேர்வின் அடிப்படையில் கலந்தாய்வு நடத்தப்பட்டு, மீதமுள்ள காலி இடங்கள், பல்கலைக்கழக நுழைவுத்தேர்வின் அடிப்படையில் நிரப்பப்படும்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளன.

"DINAMALAR"

PAGE NO: 01

DATE: 19.08.21

# பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரி சேர்க்கைக்கு விண்ணப்பம் வினியோகம்

**புதுச்சேரி, ஆக.19–**
பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரியில் டிகிரி, டிப்ளமோ, சான்றிதழ் படிப்புகளுக்கு இன்று முதல் விண்ணப்பிக்கலாம்.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் கீழ் செயல்படும் சமுதாயக் கல்லூரி, லாஸ்பேட்டையில் அமைந்துள்ளது. இங்கு, காலத்திற்கேற்ப உடனடி வேலைவாய்ப்பு பெறும் வகையில், 64 வகையான டிகிரி, டிப்ளமோ, சான்றிதழ் படிப்புகள் உள்ளன.

இந்தாண்டு கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம், நடிப்பு உள்ளிட்ட 6 மாத சான்றிதழ் படிப்புகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

டிகிரி தொழிற்படிப்புகளை பொறுத்தவரை சாப்ட்வேர் டெவலப்மெண்ட், டூரிசம் சர்வீஸ் இன்டஸ்ட்ரீஸ், ரேடியோகிராப்பிக் இமேஜிங் டெக்னாலஜி, ஆபரேஷன் தியேட்டர் டெக்னாலஜி படிப்புகள் உள்ளன.

பி.சி.ஏ., பி.எஸ்.சி., பயோகெமிஸ்ட்ரி, மல்டிமீடியா, பி.பி.ஏ., பி.காம் படிப்புகள் உள்ளன.

பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில் இந்தாண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பம் இன்று 19ம் தேதி முதல் http://pucc.edu.in என்ற இணையதளத்தில் வழங்கப்படுகிறது.

அடுத்த மாதம் 6ம் தேதி வரை ஆன்–லைனில் விண்ணப்பம் கிடைக்கும். கவுன்சிலிங், அடுத்த மாதம் 27ம் தேதி துவங்க உள்ளது. இத்தகவலை பல்கலைக்கழக சமுதாய கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

"DINAMANI"

PAGE NO: 03

DATE: 19.08.21

# புதுவை பல்கலை.யில் எம்பிஏ படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்

**புதுச்சேரி, ஆக.18:** புதுவைப் பல்கலைக்கழகத்தில் 2021 - 22ஆம் கல்வியாண்டுக்கான முதுநிலை வணிக மேலாண்மை, பன்னாட்டு வணிக மேலாண்மை படிப்புகளுக்கான பொது நுழைவுத் தேர்வுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து புதுவை பல்கலைக்கழகம் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: புதுவை பல்கலைக்கழகத்தில் உலக தரத்திலான முதுநிலை வணிக மேலாண்மைப் படிப்புகள் (எம்பிஏ) வழங்கப்பட்டு வருகின்றன.

முன்னதாக, 2021 - 22ஆம் கல்வியாண்டுக்கு மேலாண்மைத் துறை சார்பில் வழங்கப்படும் முதுநிலை வணிக மேலாண்மை, பன்னாட்டு வணிகத் துறை சார்பில் வழங்கப்படும் முதுநிலை பன்னாட்டு வணிக மேலாண்மை ஆகிய படிப்புகளுக்கு இந்திய மேலாண்மை நிறுவனம் மூலம் நடத்தப்படும் பொது நுழைவுத் தேர்வுக்கு (சிஏடி) விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன.

தற்போது மேற்கூறிய படிப்புகளில் சேர்ந்து பயில்வதற்கு, புதுவை பல்கலைக்கழக பொது நுழைவுத் தேர்வுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். இந்தக் கல்வியாண்டில் மாணவர்கள் சேர்க்கையானது முதலில் இந்திய மேலாண்மை நிறுவனம் சார்பில் நடத்தப்படும் பொது நுழைவுத் தேர்வின் அடிப்படையில் நடத்தப்பட்டு, மீதமுள்ள காலி இடங்கள் புதுச்சேரி பல்கலைக்கழக பொது நுழைவுத் தேர்வின் அடிப்படையில் நிரப்பப்படும்.

நுழைவுத் தேர்வுக்கு மாணவர்கள் வருகிற வருகிற 27-ஆம் தேதிக்குள் இணையம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். மேலும், விவரங்களுக்கு பல்கலைக்கழக அதிகாரப்பூர்வ (pondi.uni.edu.in) இணையதளத்தைப் பார்வையிடலாம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"HINDUTAMIL"

PAGE NO: 03

DATE: 19.08.21

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில்

# எம்பிஏ, பன்னாட்டு எம்பிஏ சேர விருப்பமா?

• 27-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்

■ புதுச்சேரி

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தில் நடப்பு கல்வியாண் டிற்கான முதுகலை வணிக மேலாண்மை மற்றும் பன் னாட்டு வணிக மேலாண்மை படிப்பு களுக்கு பொது நுழைவுத் தேர்வு மூலம் வரும் 27-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்.

புதுவைப் பல்கலைக்கழகத்தில் முதுநிலை வணிக மேலாண்மைப் படிப்புகள் (எம்பிஏ) வழங்கப்பட்டு வருகின்றன.

பல்கலைக்கழக மேலாண் மைத் துறையில் படித்து முடித்த மாணவர்கள் உலகின் தலைச் சிறந்த தொழில் நிறுவனங் களை தோற்றுவித்தும், அதிகாரிக ளாகவும் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில், நடப்பு கல்வியாண்டுக்கான சேர்க்கை குறித்த விவரத்தை பல்கலைக்கழக நிர்வாகம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

அதன் விவரம்:

2021-2022 கல்வியாண்டிற்கான மேலாண்மை துறை சார்பில் வழங்கப்படும் முதுகலை வணிக மேலாண்மை மற்றும் பன்னாட்டு வணிக துறை சார்பில் வழங்கப் படும் முதுகலை பன்னாட்டு வணிக மேலாண்மை ஆகிய படிப்பு களுக்கு இந்திய மேலாண்மை நிறுவனம் சார்பில் நடத்தப்படும் பொது நுழைவுத் தேர்வு (CAT) மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன.

தற்போது, மேற்சொன்ன படிப்புகளில் சேர்ந்து பயில புதுச் சேரி பல்கலைக்கழக பொது நுழைவுத்தேர்வு மூலமும் மாணவர் களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## நுழைவுத் தேர்வு

இக்கல்வியாண்டில், மாண வர்கள் சேர்க்கையானது முதலில் இந்திய மேலாண்மை நிறுவனம் சார்பில் நடத்தப்படும் பொது நுழைவுத் தேர்வின் அடிப்படையில் நடத்தப்பட்டு, மீதமுள்ள காலி இடங்கள், புதுச்சேரி பல்கலைக்கழக பொது நுழைவுத்தேர்வின் அடிப்படையில் நிரப்பப்படும்.

இதில் சேர மாணவர்கள் வருகிற 27-ம் தேதிக்குள் இணைய வழியில் விண்ணப்பிக்க வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு பல்கலைக்கழக அதிகாரப்பூர்வ இணையத் தளத்தைக் காணலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.